**செய்தி வெளியீடு எண்: 229** **நாள்: 05.04.2018**

**<u>செய்தி வெளியீடு</u>**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் இன்று (5.4.2018) தலைமைச் செயலகத்தில், 2017–ஆம் ஆண்டுக்கான தமிழ்த்தாய் விருது, கபிலர் விருது, உ.வே.சா. விருது, கம்பர் விருது, சொல்லின் செல்வர் விருது, ஜி.யு. போப் விருது, உமறுப்புலவர் விருது, இளங்கோவடிகள் விருது, அம்மா இலக்கிய விருது, சிறந்த மொழிபெயர்ப்பாளர் விருதுகளையும், 2016–ஆம் ஆண்டுக்கான முதலமைச்சர் கணினித் தமிழ் விருது, 2016 மற்றும் 2017ஆம் ஆண்டுகளுக்கான உலகத் தமிழ்ச் சங்க விருதுகள் மற்றும் தமிழ்ச் செம்மல் விருதுகள், என மொத்தம் 90 விருதுகளை விருதாளர்களுக்கு வழங்கிச் சிறப்பித்தார்கள்.

மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள், தமிழ் வளர்ச்சிக்காகப் பாடுபடும் சான்றோர்களையும், தமிழறிஞர்களையும் சிறப்பிக்கும் வகையில், ஆண்டுதோறும் சித்திரை தமிழ்ப் புத்தாண்டு விருதுகள் வழங்கி சிறப்பித்து வந்தார்கள்.

அவ்வகையில், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் வழியில் செயல்படும் தமிழ்நாடு அரசு, 2017–ஆம் ஆண்டிற்கான **தமிழ்த்தாய் விருதிற்கு** பெங்களூரு தமிழ்ச் சங்கம் தெரிவு செய்யப்பட்டு, விருதுத் தொகையாக 5 லட்சம் ரூபாய்க்கான காசோலை, கேடயம், தகுதியுரை மற்றும் பொன்னாடை ஆகியவற்றை அச்சங்கத்தின் நிர்வாகிகளுக்கும்;

கல்வெட்டியியலிலும், தொல்லியல் துறையிலும் தனிமுத்திரை பதித்துவரும் முனைவர் கு.வெ. பாலசுப்பிரமணியன் அவர்களுக்கு 2017–ஆம் ஆண்டிற்கான **கபிலர் விருது;**

சுவடியியல் பதிப்பிலும் அகழாய்வுத் துறையிலும் சிறந்து விளங்கும் திரு.ச.கிருட்டின மூர்த்தி அவர்களுக்கு 2017–ஆம் ஆண்டிற்கான **உ.வே.சா. விருது;**

மேடைகளிலும் அரங்குகளிலும் புலவர் பெருமான் கம்பர் அவர்களின் புகழ்பாடும் தமிழறிஞர் திரு. சுகி.சிவம் அவர்களுக்கு 2017–ஆம் ஆண்டிற்கான **கம்பர் விருது;**

தன் நாவன்மைகொண்டு சொல்லிலும் செயலிலும் தமிழ்ச் சமூகப்பணியை ஆற்றிவரும் நற்றமிழர், நாடறிந்த நாவலர் முனைவர் வைகைச்செல்வன் அவர்களுக்கு 2017–ஆம் ஆண்டிற்கான **சொல்லின் செல்வர் விருது;**

அயல்நாட்டு மொழிகளில் தமிழ் இலக்கியங்களை மொழி பெயர்க்கும் சிறந்த தமிழ் மொழி பெயர்ப்பாளர் திருமதி கோ. இராஜேஸ்வரி கோதண்டம் அவர்களுக்கு 2017–ஆம் ஆண்டிற்கான **ஜி.யு.போப் விருது;**

உமறுப்புலவர் தமிழுக்கு ஆற்றிய அருந்தொண்டை போற்றும் வகையில், தமிழுக்கும் தமிழ் இலக்கியத்திற்கும் தொண்டாற்றி வரும் தமிழ் அறிஞர் திரு. ஹாஜி எம். முகம்மது யூசுப் அவர்களுக்கு 2017–ஆம் ஆண்டிற்கான **உமறுப்புலவர் விருது;**

தேசியக் காப்பியம் சிலப்பதிகாரத்தை வடித்தெடுத்த அருந்தமிழ்ப் பாவலர், இளங்கோவடிகள் நடையில் தமிழ்த் தொண்டாற்றிவரும் முனைவர் வெ. நல்லதம்பி அவர்களுக்கு 2017–ஆம் ஆண்டிற்கான **இளங்கோவடிகள் விருது;**

பெண்ணியத்தின் பெருமை பேசும் பைந்தமிழிலக்கியங்களைப் படைத்துத் தமிழ்ப்பணியாற்றி வரும் சிங்கப்பூரைச் சேர்ந்த முனைவர் எம்.எஸ். ஸ்ரீஇலட்சுமி அவர்களுக்கு 2017–ஆம் ஆண்டிற்கான **அம்மா இலக்கிய விருது;**

கணினித் துறையில் கன்னித் தமிழ் வளர்த்து சிறந்த தமிழ்ப்பணியாற்றிவரும் அல்டிமேட் மென்பொருள் தீர்வக நிறுவனர் திரு. இரா. துரைபாண்டி அவர்களுக்கு 2016–ஆம் ஆண்டிற்கான **முதலமைச்சர் கணினித் தமிழ் விருது;**

ஆகிய விருதாளர்களுக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் இன்று தலா ஒரு லட்சம் ரூபாய்க்கான காசோலை, ஒரு சவரன் தங்கப் பதக்கம், தகுதியுரை மற்றும் பொன்னாடை ஆகியவற்றை வழங்கி சிறப்பித்தார்கள்.

2017–ஆம் ஆண்டிற்கான **சிறந்த மொழிபெயர்ப்பாளர் விருதுகள்** திரு.நெல்லை சு. முத்து, திரு.தி.வ. தெய்வசிகாமணி (தெசிணி), திரு.ஆ. செல்வராசு (எ) குறிஞ்சிவேலன், முனைவர் ஆனைவாரி ஆனந்தன், திரு.மறவன் புலவு சச்சிதானந்தம், திருமதி வசந்தா சியாமளம், முனைவர் இரா.கு. ஆல்துரை, பேராசிரியர் சி.அ. சங்கரநாராயணன், திருமதி ஆண்டாள் பிரியதர்சினி, முனைவர் தர்லோசன் சிங் பேடி ஆகிய விருதாளர்களுக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் இன்று தலா ஒரு லட்சம் ரூபாய்க்கான காசோலை, தகுதியுரை மற்றும் பொன்னாடை வழங்கி சிறப்பித்தார்கள்.

2016–ஆம் ஆண்டுக்கான **உலகத் தமிழ்ச் சங்க விருதுகளான** இலக்கிய விருதினை சிங்கப்பூர் நாட்டைச் சேர்ந்த திரு.நா. ஆண்டியப்பன் அவர்களுக்கும், இலக்கண விருதினை பிரான்சு நாட்டைச் சேர்ந்த திரு.பெஞ்சமின் லெபோ அவர்களுக்கும், மொழியியல் விருதினை ஜெர்மனி நாட்டைச் சேர்ந்த முனைவர் சுபாஷினி அவர்களுக்கும், 2017–ஆம் ஆண்டுக்கான உலகத் தமிழ்ச் சங்க விருதுகளான இலக்கிய விருதினை ஆசுதிரேலியா நாட்டைச் சேர்ந்த முனைவர் சந்திரிகா சுப்ரமணியன் அவர்களுக்கும் இலக்கண விருதினை ஜெர்மனி நாட்டைச் சேர்ந்த முனைவர் உல்ரிகே நிகோலஸ் அவர்களுக்கும் மொழியியல் விருதினை ஆசுதிரேலியா நாட்டைச் சேர்ந்த திரு. மகாதேவ ஐயர் ஜெயராமசர்மா ஆகிய

விருதாளர்களுக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் இன்று தலா ஒரு லட்சம் ரூபாய்க்கான காசோலை, தகுதியுரை மற்றும் பொன்னாடை வழங்கி சிறப்பித்தார்கள்.

மேலும், 2016–ஆம் ஆண்டுக்கான **தமிழ்ச் செம்மல் விருதுகள்** கவிஞர் பாரதி சுகுமாரன் (சென்னை மாவட்டம்), திரு.பாக்கம் பிரதாபசிம்மன் (எ) சு. பாக்கம் தமிழன் (திருவள்ளூர் மாவட்டம்), திரு.தெ.பொ. இளங்கோவன் (காஞ்சிபுரம் மாவட்டம்), பேராசிரியர் முனைவர் இரத்தின நடராசன் (வேலூர் மாவட்டம்), திரு.கருமலை தமிழாழன் (எ) கி. நரேந்திரன் (கிருட்டினகிரி மாவட்டம்), திரு.ப. குப்பன் (திருவண்ணாமலை மாவட்டம்), புலவர் பெ. சயராமன் (விழுப்புரம் மாவட்டம்), பிறவிக் கவிஞர் சி. இராமசாமி (கடலூர் மாவட்டம்), முனைவர் க. பெரியசாமி (பெரம்பலூர் மாவட்டம்), புலவர் பூவை சு. செயராமன் (அரியலூர் மாவட்டம்), முனைவர் கவிஞர் கு. கணேசன் (சேலம் மாவட்டம்), முனைவர் வே. சஞ்சீவராயன் (தருமபுரி மாவட்டம்), முனைவர் அரசு பரமேசுவரன் (நாமக்கல் மாவட்டம்), திரு.ப. பாலன் (ஈரோடு மாவட்டம்), திரு.ப. எழில்வாணன் (கரூர் மாவட்டம்), திரு.மு.பெ. இராமலிங்கம் (கோயம்புத்தூர் மாவட்டம்), திரு.ப. சுப்ரபாரதி மணியன் (திருப்பூர் மாவட்டம்), புலவர் கமலம் சின்னசாமி (நீலகிரி மாவட்டம்), திரு.ப. முத்துக்குமாரசாமி (திருச்சிராப்பள்ளி மாவட்டம்), கவிஞர் தங்கம் மூர்த்தி (புதுக்கோட்டை மாவட்டம்), பேராசிரியர் மு. அய்க்கண் (சிவகங்கை மாவட்டம்), திரு.மு. முகமது தாஹா (தஞ்சாவூர் மாவட்டம்), திரு.அ. சிவசுப்பிரமணியன் (அ.சி. மணியன்) (திருவாரூர் மாவட்டம்), புலவர் ஜெ. சண்முகம் (நாகப்பட்டினம் மாவட்டம்), கவிஞர் தஸ்லின் காஜா (இராமநாதபுரம் மாவட்டம்), முனைவர் ம.நா. அழகிய நாகலிங்கம் (மதுரை மாவட்டம்), திரு.ச. சுடர்முருகையா (திண்டுக்கல் மாவட்டம்), திரு.து. சுப்பராயலு (தேனி மாவட்டம்), கவிஞர் ஜெ. இராமநாதன் (விருதுநகர் மாவட்டம்), திருமதி ஆ. பால சரசுவதி (திருநெல்வேலி மாவட்டம்), திரு.க. கருத்தபாண்டி (தூத்துக்குடி மாவட்டம்), முனைவர் மு. ஆல்பென்ஸ் நதானியேல் (கன்னியாகுமரி மாவட்டம்);

2017–ஆம் ஆண்டுக்கான தமிழ்ச் செம்மல் விருதுகள் திரு.வே.பிரபாகரன் (சென்னை மாவட்டம்), திரு.வ. விசயரங்கன் (திருவள்ளூர் மாவட்டம்), முனைவர் ப.ச. ஏசுதாசன் (காஞ்சிபுரம் மாவட்டம்), திரு.மு.சு. தங்கவேலன் (வேலூர் மாவட்டம்), திருமதி மு. மணிமேகலை (கிருட்டினகிரி மாவட்டம்), திருமதி சாமி தமிழ்ச்செல்வி கமலக்கண்ணன் (திருவண்ணாமலை மாவட்டம்), முனைவர் ப.கோ. நாராயணசாமி (விழுப்புரம் மாவட்டம்), பேராசிரியர் இரா.ச. குழந்தைவேலன் (கடலூர் மாவட்டம்), திரு.வை. தேசிங்குராசன் (எ) தேனரசன் (பெரம்பலூர் மாவட்டம்), முனைவர்

பி. சேதுராமன் (அரியலூர் மாவட்டம்), திரு.மா. பாண்டுரங்கன் (சேலம் மாவட்டம்), முனைவர் கோ. கண்ணன் (தருமபுரி மாவட்டம்), கவிஞர் நா. தனபாலன் (நாமக்கல் மாவட்டம்), திரு.ப. ராமசாமி (உமையவன்) (ஈரோடு மாவட்டம்), திரு.மேலை பழநியப்பன் (கரூர் மாவட்டம்), திரு.பா. இரவிக்குமார் (கோயம்புத்தூர் மாவட்டம்), வள்ளுவன் அடிபொடி முனைவர் வி. ஆனந்தகுமார் (திருப்பூர் மாவட்டம்), திரு.த. கணேசன் (நீலகிரி மாவட்டம்), முனைவர் ப. சுப்பிரமணியன் (திருச்சிராப்பள்ளி மாவட்டம்), திரு.இரா. சம்பத்குமார் (புதுக்கோட்டை மாவட்டம்), திருமதி வ. தெய்வானை (தேவி நாச்சியப்பன்) (சிவகங்கை மாவட்டம்), பேராசிரியர் முனைவர் வி.ஆ. இளவழகன் (தஞ்சாவூர் மாவட்டம்), மருத்துவர் அழ. மீனாட்சி சுந்தரம் (திருவாரூர் மாவட்டம்), திரு.மு.வெங்கடேசபாரதி (நாகப்பட்டினம் மாவட்டம்), திரு.மா.அ. சுந்தரராஜன் (இராமநாதபுரம் மாவட்டம்), மருத்துவர் து. மெய்கண்டன் (மதுரை மாவட்டம்), திரு.மா. வயித்தியலிங்கன் (திண்டுக்கல் மாவட்டம்), புலவர் மு. இராசரத்தினம் (தேனி மாவட்டம்), திரு.சா. ஜோசப் (விருதுநகர் மாவட்டம்), முனைவர் பி. இரத்தினசபாபதி (திருநெல்வேலி மாவட்டம்), திரு.இரா. இராஜ் (தூத்துக்குடி மாவட்டம்), திரு.கே. சுப்பையா (கன்னியாகுமரி மாவட்டம்) ஆகிய விருதாளர்களுக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் எடப்பாடி திரு.கே. பழனிசாமி அவர்கள் இன்று தலா 25 ஆயிரம் ரூபாய்க்கான காசோலை, தகுதியுரை மற்றும் பொன்னாடை ஆகியவற்றை வழங்கி சிறப்பித்தார்கள்.

இந்த நிகழ்ச்சியில், மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு.ஓ. பன்னீர்செல்வம், மாண்புமிகு உயர்கல்வித் துறை அமைச்சர் திரு.கே.பி. அன்பழகன், மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி மற்றும் தமிழ்ப் பண்பாட்டுத் துறை அமைச்சர் திரு.க. பாண்டியராஜன், தலைமைச் செயலாளர் முனைவர் கிரிஜா வைத்தியநாதன், இ.ஆ.ப., தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறைச் செயலாளர் திரு. இரா. வெங்கடேசன், இ.ஆ.ப., தமிழ் வளர்ச்சித் துறை இயக்குநர் மற்றும் உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தின் இயக்குநர் (பொறுப்பு) முனைவர் கோ. விசயராகவன், மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

* * * * * *

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**
**நாள்: 5.4.2018**